பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

23 08 2024 **FRIDAY** **6.30 PM**

<u>மாநில செய்திகள்</u>

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. ரஷ்யா – உக்ரைன் இடையேயான பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாணப்பட வேண்டும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி வலியுறுத்தியுள்ளார்.

2. பழங்குடியினர் நலனுக்கான திட்டங்கள் குறித்த ஒருங்கிணைந்த விழிப்புணர்வு இயக்கத்தை மத்திய அரசு தொடங்கியுள்ளது.

3. தமிழகத்தில் சட்டம் - ஒழுங்கு முறையாக பராமரிக்கப்பட்டு வருவதாக முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

4. மத்திய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் காரணமாக விண்வெளித்துறையில் பல்வேறு சாதனைகள் படைக்கப்பட்டுள்ளதாக பிஜேபி தெரிவித்துள்ளது.

5. 17 வயதுக்கு உட்பட்டோருக்கான உலக மல்யுத்த சாம்பியன் போட்டியின் மகளிர் பிரிவில் இந்தியா நான்கு தங்கப்பதக்கங்களை வென்றது.

*<u>-- இனி விரிவான செய்திகள் --</u>*

**<<<<<>>>>>**

ரஷ்யா – உக்ரைன் இடையேயான பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாணப்பட வேண்டும் என்ற பிரதமர் திரு நரேந்திர மோடி வலியுறுத்தியுள்ளார்.

அரசுமுறைப்பயணமாக உக்ரைன் சென்றுள்ள அவர், அந்நாட்டு அதிபர் திரு **Volodymyr Zelenskyy-**யுடன் இன்று **Kyiv-**ல் பேச்சு நடத்தினார்.

இந்த பேச்சுவார்த்தை ஆக்கப்பூர்வமாக அமைந்ததாக வெளியுறவு அமைச்சர் திரு ஜெய்சங்கர் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

உக்ரைன் அதிபரை இந்தியாவுக்கு வருமாறு பிரதமர் அழைப்பு விடுத்ததாகவும் அவர் கூறினார்.

இந்த பேச்சுவார்த்தைகளுக்கு பின்னர் இரு நாடுகளுக்கு இடையே பல்வேறு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டுள்ளதாகவும் திரு ஜெய்சங்கர் தெரிவித்தார்.

<<<<<>>>>>

தமிழகத்தில் சட்டம் - ஒழுங்கு முறையாக பராமரிக்கப்பட்டு வருவதாக முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

இன்று சென்னையில் காவல்துறையில் சிறப்பாக பணியாற்றியவர்களுக்கான குடியரசுத் தலைவர், உள்துறை அமைச்சர் மற்றும் முதலமைச்சர் பதக்கங்களை வழங்கி அவர் பேசினார்.

*(சவுண்ட் பைட் - ஸ்டாலின் - 30 செகண்ட்ஸ்)*

<<<<<>>>>>

பழங்குடியினர் நலனுக்கான திட்டங்கள் குறித்த ஒருங்கிணைந்த விழிப்புணர்வு இயக்கத்தை மத்திய அரசு தொடங்கியுள்ளது.

இந்த இயக்கம் அடுத்த மாதம் 10-ஆம் தேதிவரை நடைபெறவுள்ளது.

பழங்குடியினர் நலனுக்கான திட்டங்கள் பயனாளிகளுக்கு முழுமையாக சென்றடைவதை உறுதி செய்யும் நோக்கில் இந்த இயக்கம் தொடங்கப்பட்டுள்ளதாக மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இந்த இயக்கத்தின்கீழ், ஆதார் அட்டைகள், சாதி சான்றிதழ்கள், வங்கிக்கணக்குகள், பட்டா உரிமைகள், வன உரிமை சட்ட பயனாளிகளுக்கான திட்ட உதவிகள் போன்றவை வழங்கப்படும் என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பழங்குடியினர் அதிகமாக வசிக்கும் 29 ஆயிரம் இடங்களில் 44 லட்சம் பேரை சென்றடையும் நோக்கில் இந்த இயக்கம் நடைபெறவுள்ளதாக அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<>>>>>

பள்ளி மாணவர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான நெறிமுறைகள் முழுமையாக பின்பற்றப்படுவதை மாநில அரசுகள் உறுதி செய்ய வேண்டும் என்று மத்திய அரசு அறிவுறுத்தியுள்ளது.

இதுதொடர்பாக, மத்திய கல்வி அமைச்சகம், மாநில அரசுகளுக்கு சுற்றிக்கை ஒன்றை அனுப்பியுள்ளது.

பாதுகாப்பு நெறிமுறைகள் குறித்த விவரங்கள் அதில் இடம்பெற்றுள்ளன.

உச்சநீதிமன்ற உத்தரவையடுத்து, இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் மத்திய அரசு கூறியுள்ளது.

<<<<<>>>>>

கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளை, பள்ளிக்கல்வித் துறையுடன் இணைப்பதற்கான நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளப்படவில்லை என்று தமிழக அரசு கூறியுள்ளது.

இதுதொடர்பாக ஊடகங்களில் வெளியான செய்திகள் முற்றிலும் தவறானவை என்று பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

கள்ளர் சீரமைப்புப்பள்ளிகளை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் தொடரும் என்றும் அந்த செய்திக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<<>>>>>

குடும்ப அட்டைகோரி விண்ணப்பித்தவர்களுக்கு அவற்றை உடனடியாக வழங்க தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பாமக நிறுவனர் மருத்துவர் ச ராமதாசு வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், கடந்த ஒன்றரை ஆண்டுகளாக ஸ்மார்ட் குடும்ப அட்டைகோரி மூன்று லட்சம் பேர் விண்ணப்பித்துள்ளதாக கூறியுள்ளார்.

இவர்களுக்கு குடும்ப அட்டைகள் இதுவரை வழங்கப்படவில்லை என்றும், இதில் காலதாமதம் செய்வது ஏன் என்றும் திரு ராமதாசு வினவியுள்ளார்.

<<<<<>>>>>

மத்திய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் காரணமாக விண்வெளித்துறையில் பல்வேறு சாதனைகள் படைக்கப்பட்டுள்ளதாக பிஜேபி தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக அக்கட்சி வெளியிட்டுள்ள அறிக்கையில், விண்வெளித்துறைக்கான நிதி ஒதுக்கீட்டினை பிஜேபி தலைமையிலான மத்திய அரசு 123 மடங்கு அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<>>>>>

தேசிய விண்வெளி தினம் இன்று கொண்டாடப்பட்டது.

சந்திரயான்-3 திட்டத்தின் வெற்றியை நினைவுகூறும் வகையில் இந்த தினம் கொண்டாடப்படுகிறது.

விண்வெளி ஆராய்ச்சியில் இஸ்ரோவின் சாதனைகள் இளைஞர் மத்தியில் மிகப்பெரிய அளவில் எழுச்சியை ஏற்படுத்தியதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(வாய்ஸ் பைட் - சேலம் விஜயகுமார் - 70 செகண்ட்ஸ்)*

<<<<<>>>>>

ரயில் விபத்து ஏற்பட்டால் பயணிகளை மீட்பது தொடர்பான ஒத்திகை நிகழ்ச்சி திருச்சி பொன்மலை ரயில் நிலையம் அருகே நடைபெற்றது.

250-க்கும் மேற்பட்டோர் இதில் பங்கேற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(வாய்ஸ் பைட் - கதிரவன் - 47 செகண்ட்ஸ்)*

<<<<<>>>>>

*மாவட்டச் செய்திகள்*

திருப்பத்தூர் மாவட்டத்தில் மத்திய – மாநில அரசு திட்டங்களின் விழிப்புணர்வு நிகழ்ச்சியை தொடங்கிவைத்த ஆட்சியர் திரு தர்பகராஜ், பல்வேறு நலத்திட்ட உதவிகளையும் பயனாளிகளுக்கு வழங்கினார்.

--------------

தருமபுரி மாவட்டத்தில் தேசிய குடற்புழு நீக்க முகாமினை ஆட்சியர் திருமதி சாந்தி இன்று தொடங்கிவைத்து பள்ளி குழந்தைகளுக்கு மாத்திரைகளை வழங்கினார்.

---------------

புதுக்கோட்டை மாவட்டத்தில் தேசிய குடற்புழு நீக்க நாள் உறுதி மொழியை ஆட்சியர் திருமதி அருணா தலைமையில் பள்ளி மாணவர்கள் இன்று எடுத்துக்கொண்டனர்.

---------------------

தூத்துக்குடி மாவட்டத்தில் அனுமதிக்கப்பட்ட இடங்களில் மட்டுமே இந்த ஆண்டு விநாயகர் சிலைகளை வைக்க வேண்டும் என்று காவல்துறை கண்காணிப்பாளர் திரு ஆல்பர்ட் ஜான் கூறியுள்ளார்.

---------------

திருவண்ணாமலையில் எயிட்ஸ் தடுப்பு குறித்த விழிப்புணர்வு பிரச்சார வாகனத்தை ஆட்சியர் திரு பாஸ்கர பாண்டியன் இன்று தொடங்கிவைத்தார்.

------------------

பெரம்பலூர் மாவட்டத்தில் மழைநீர் சேகரிப்பு குறித்த விழிப்புணர்வு பிரச்சார வாகனத்தின் சேவையை ஆட்சியர் திருமதி கிரேஸ் பச்சாவ் இன்று தொடங்கிவைத்தார்.

---------------

மைசூர் - செங்கோட்டை இடையே அடுத்த மாதம் 4 மற்றும் 7-ஆம் தேதிகளில் சிறப்பு ரயில் இயக்கப்படும் என்று தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது. மறுமார்க்கத்தில் 5 மற்றும் 8-ஆம் தேதிகளில் இந்த ரயில் சேவை இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

-------------

ஒகேனக்கல் அருவிகளில் நீர்வரத்து குறைந்ததையடுத்து, சுற்றுலா பயணிகள் பாதுகாப்பாக குளிப்பதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

**<<<<<>>>>>**

*விளையாட்டுச் செய்திகள்*

17 வயதுக்கு உட்பட்டோருக்கான உலக மல்யுத்த சாம்பியன் போட்டியில், இந்தியா நான்கு தங்கப்பதக்கங்களை வென்றது.

ஜோர்டானின் அம்மானில் நடைபெற்றுவரும், இப்போட்டியின் மகளிர் 65 கிலோ எடைப்பிரிவில் **Pulkit**-ம் 73 கிலோ எடைப்பிரிவில் **Mansi**-ம் 43 கிலோ எடைப்பிரிவில் **Aditi Kumari**-ம், 57 கிலோ எடைப்பிரிவில் **Neha** –வும் தங்கப்பதக்கம் வென்றனர்.

இப்போட்டியில் இந்தியா இதுவரை நான்கு தங்கம், இரண்டு வெண்கலப்பதக்கங்களை வென்றுள்ளது.

--------------------

கொரியா கோப்பைக்கான சைக்கிள் போட்டியில் இந்தியாவின் **Esow Alben** வெள்ளிப்பதக்கம் வென்றார்.

கொரியாவின் **Yang Yang**–ல் நடைபெற்ற இப்போட்டியின் ஆடவர் பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

--------------

ஆசிய ஜுனியர் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Tankara Gnana Dattu** மற்றும் **Tanvi Patri** அரையிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

---------------

மாலத்தீவில் நடைபெற்றுவரும் ஆசிய அலைச்சறுக்கு சாம்பியன் போட்டியில் இந்தியாவின் கிஷோர் குமார் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

----------------

20 வயதுக்கு உட்பட்டோருக்கான தெற்காசிய கால்பந்து சாம்பியன் போட்டியில், இந்தியா அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

நேபாளத்தில் நடைபெற்றுவரும் இப்போட்டியில் இன்று இந்தியா 1-0 கோல் கணக்கில் மாலத்தீவை வென்றது.

<<<<<END>>>>>